# முத்தமிழ் மன்றம்

## 2022-2023 நிகழ்ச்சிகளின் தொகுப்பு

1. **விவாத மேடை :**

முத்தமிழ் மன்றம் சார்பாக "தொழில்நுட்ப வளர்ச்சியின் நன்மைகள் மற்றும் தீமைகள்" தொடர்பான தொடர்பாக விவாத மேடை 22.05.2022 அன்று மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டது. மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தொழில்நுட்ப வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும் சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றியும் அதனால் ஏற்பட்ட தீமைகளையும் விவாதித்தனர்.

அருட்செல்வர்மொழிபெயர்ப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் **"திரு பாலசுப்ரமணியம்"** அவர்கள் நடுவராக பங்கேற்று மாணவர்களை ஊக்குவித்தார்.










## 2. பட்டிமன்றம்




பட்டிமன்றத்தில் நடுவரின் உரை




கல்லூரி முதல்வருடன் பட்டிமன்ற குழு



தமிழர் சிந்தனை கலை வெளிபாட்டு வடிவங்களில் சிறப்பான ஒரு வடிவம் பட்டிமன்றம் ஆகும். முரண்பாடான பலநோக்கங்ளை உடைய கருத்துக்களை விபரிக்க, விவாதிக்க, பரப்புரைக்க பட்டிமன்றங்கள் உதவுகின்றன. வன்முறையற்ற, பண்புபட்ட முறையில், கருத்துக்களையும் பேச்சுத் திறனையும் முன்வைத்து, சிக்கலான பிரச்சினைகளை அலச பட்டிமன்றங்கள் உதவுகின்றன. இத்தகு பட்டிமன்றத்தினை "அறவழியில் நடப்பது சங்கடமே! சாத்தியமே!" என்ற தலைப்பில் , திரு கே.சுப்பிரமணியம் (இணை நூலகர்) அவர்களை நடுவராகக் கொண்டு , சாத்தியமே தரப்பிலிருந்து மாணவர்கள் கார்த்திக்.K, மோனிகா .T, திவ்யதர்ஷினி .A மற்றும் பங்கேற்றனர் , அத்துடன் சங்கடமே தலைப்பில் மாணவர்கள் சுந்தரே ஷ்வரன்.A, ரமேக்ஷ்ஆனந்தன்.P ,செபோரல்ஐஸ்வர்யா .D பங்கேற்று தலைப்புகளுக்கேற்ற கருத்துகளையும், நடைமுறை நிகழ்வுகளையும் கொண்டு நயனம் கலந்து நடைமுறைத் தமிழில் நகைச்சுவை கருத்துக்களுடன் மக்களை சிறந்த வழியில் சிந்திக்க வைத்தனர்.மேலும் இருதரப்பினரிலிருந்தும் ஆகச் சிறந்த கருத்துக்களை எடுத்துரைத்ததற்காக மோனிகா .T மற்றும் சுந்தரே ஷ்வரன்.A ஆகியோருக்கு பரிசுத்தொகை வழங்கப்பட்டது.




**முத்தமிழ் மன்ற குழுவினர்கள்**

**3. சாலை பாதுகாப்பு வார விழா நிகழ்ச்சிகள்**

பொள்ளாச்சி என் ஜி எம் கல்லூரியில், வட்டார போக்குவரத்து அலுவலகம் நடத்திய சாலை பாதுகாப்பு விழாவில் முத்தமிழ் மன்ற மாணவர்கள் செல்வகுமார் மற்றும் தி மோனிகா ஆகியோர் கல்லூரி சார்பாக கலந்து கொண்டு உரையாற்றினர்.









4. **கவிதை போட்டி & உரி அடித்தல்:**

    பொங்கல் விழாவை முன்னிட்டு தமிழர் வரலாற்றை பறைசாற்றும் விதமாக "தமிழர் பண்பாடு"  எனும் தலைப்பில் 10.01.2023 அன்று மாணவர்களுக்கு கவிதை போட்டியும் உரியடி போட்டியும் நடத்தப்பட்டது.


